# ஸ்ரீ விராட் விஸ்வபிரம்மணே நம:

## முன்னுரை

ஸ்ரீமத் விராட் விஸ்வகர்ம பரபிரஹ்ம முகத்தில் தோன்றிய சானக, சநாதன, அபுவநஸ, பிரத்நஸ, சுபர்ணஸ ஆகிய ஐந்து கோத்திரத்தில் உற்பவித்த விஸ்வகர்மா சமுதாய மக்கள் யாவரும் வேதாதிகாரம், யாகாதிகாரம் மற்றும் வேதோக்த நிகழ்ச்சிகள் நன்கு நடத்தி வரும் வேலையில் 1797 வது வருடத்தில் யுவவருடம் மைலவரி பட்டணம் பிரம்மஸ்ரீ விஸ்வகர்மான் வய பாப்பய்ய அத்வரி என்றும் கூறும் விஸ்வகர்மாவானவர் யாகம் ஒன்று சிறப்பான முரையில் செய்யும் பொழுது பாப்பய்ய ஆச்சாரிக்கும் பிருந்தாவனபண்டித ப்ராஹ்மணர்களுக்கும் நடந்த விஸ்வ பிராம்மணீகத்தை குறித்து நடத்தப்பட்ட பஞ்சாயத்து தீர்ப்பு எனும் விஸ்வகர்மா ந்வயபூஷணம் என்னும் நூலை தெலுங்கு, கிரந்தம் ஆகிய மொழிகளிலிருந்து 1913 ஆம் ஆண்டு சென்னை குல அபிமானி கோ.கன்னியப்ப ஆச்சாரியார் வெளியிட்டு புத்தகத்தை அடியேனிடம் வேலூர் நண்பர் பிரம்மஸ்ரீ. பாலமுருகன் அவர்கள் கொடுத்து இந்நூலை தமிழில் வெளியிட்டால் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்குமென்று கேட்டார். அதை அடியேன் ஒருமுறை படித்து அதன் அற்புத விஷயங்களை மனதில் கொண்டு வெளியிட முயற்சித்தேன். இப்பொழுது இந்நூல் விஸ்வகர்ம சமுதாயத்தினர்கள் எல்லோரிடத்திலும் இருக்க வேண்டும் என்ற காரணத்தினாலும் ஸ்ரீ ஜகத்குரு ஆதிசிவலிங்காச்சார்ய குருமூர்த்தியின் பண்ணெடு நாட்களுக்கு பிறகு நடைபெறும் மஹா கும்பாபிஷேகத்தின் போது வெளியிட எனக்கு ஸ்ரீ விஸ்வேஸ்வரன் திருவருள் புரிந்தார் என சிரமேற்கொண்டு இந்நூலை வெளியிட்டு உள்ளேன். குல அபிமானிகள் அவசியம் இந்நூலை நன்கு வாசித்து நம் சமுதாய பெருமைகளை மனதில் கொண்டு இதுபோல் பல யாகயக்ஞங்களை நடத்தியும் எல்லாம் வல்ல விஸ்வேஸ்வரின் திருவருளை அடைய வேணுமாய் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.


குல அபிமானி

**பிரம்மஸ்ரீ. ஜோதி. முருகாச்சாரியார்**
தமிழ்நாடு விஸ்வப்ராஹ்மண புரோஹிதர்கள் சங்க செயலாளர்
40, ஸ்ரீ காளிகாம்பாள் திருக்கோயில்
பேரிப்பேட்டை, வேலூர்.

# விசுவகர்மா ந்வய பூஷணம்

-------------------------------

இது,
வேதபண்டிதசபையில் சித்தாந்தமான
சிரௌதஸ்மார்த்த கர்மாதிகாரமுடையவர்களும்
விஸ்வகர்மவமிஸத்தவர்களுமான பௌருஷேய
ப்ராம்மணர்களுக்கு அத்யந்தோபகாரமாக

**கோஸூரி-பாபய்யதீக்ஷிதரவர்களால்**
சமஸ்கிருதபாஷையிலிம், ஆந்திரபாஷையிலும் இயற்ரப்பட்டிருந்ததை

பிரம்மஸ்ரீ மீனாக்ஷிபுரம்

**ஜோசியர்.மூத்துவாச்சாரியரவர்களாலும்**

பிரம்மஸ்ரீ சி.கி. **சுந்தராச்சாரியரவர்களாலும்**,

தமிழில் மொழிபெயர்கப்பட்டு
--------------------------

சென்னை சிந்தாதிரிப்பேட்டை,
விஸ்வகுலோத்தரண அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டன.

இதன் விலை: 1913 ஆம் ஆண்டு 2. அணா

பரப்பிரம்ஹணே நம:

# விஸ்கர்மாந்வய பூஷணம்

---------------------------------

ஸ்லோகம்:

ஸ்ரியம் கடாக்ஷேக்ஷணேந ஜகதாநந்த காரிணீம்
வந்தே மாஸிரேர் ரக்ஷ நீராஜித பதாம் புஜாம்.

கருத்து:

தேவர்களுடைய சிரோரத்நங்களினால் நீராஜிதம் செய்யப்படும் பாதாரவிந்தங்களோடு கூடினவரும், ஜகத்துக்கு ஆனந்தகாரணமாகிய கடாக்ஷவீ க்ஷண்யத்தையுடையவளுமாகிய ஸ்ரீலக்ஷுமிதேவியை நமஸ்காரஞ் செய்கிறேன்.

ஸ்லோகம்:

ஸமஸ்த ஜகதாம் ஸ்ருஷ்டு: புத்ரயோ விஸ்வகர்மண:
த்வஷ்ருப்ரஜாபதிரிதி க்யாதஸ்ய மஹாத்மந:

விஸ்வரூபோ பவத்புத்ர: க்யாதஸ்தத்வம் ஸஜந்மந:
கோஸூராந்வய ஜாதஸ்ய ஸ்ரீவித்யா நிரதஸ்யச

மல்லிகார்ஜுந நாம்நஸ்து தது்ஜேநது தாத்ருஸ:
லக்ஷ்மீகர்ப மஹாஸுக்து மௌக்திகேந மயாதுநா

மைலவர்ய புரேஸ்தித்யா விஸ்வகர்மாந் வயாய்சித:
ஆசார்யத்வம் ப்ரதீபத்ய ஸத்கர்ம நிரதஸ்ஸதா

ஸமஸ்த புதப்ருந்தேந ஸ்மாபாதித கர்மணா
ஸ்ருத்யைக விதிநாஸம்யக் ஸமாயாதய ஸோப்ருதா
பாபய்யாத் வரிணாஸம்யக் ரச்யதேப்ரஸ்நமாலிகா

சமஸ்த ஜகத் ஸ்ருஷ்டி திதிலயக்ருத்யங்களுடைய விஸ்வகர்மாவென்கிற பிரம்மவம்ஸத்தில் ப்ரஸித்தியடைந்த துவஷ்டுப்பிரஜாபதியும், அந்த மஹாத்மாவினிடத்திலிருந்து விசுவரூபரும் உற்பவமானார்கள்.

இந்தப்ராகாரமே ப்ரசித்தியடைந்த கோத்திரத்தி லுற்பவித்தவரும், கோஸூரியென்கிற வீட்டுப்பெயரையுடைய வம்ஸத்தில் வந்தவரும், ஸ்ரீ வித்யாநிரதராய் ஸ்ரீ மதகண்ட ராஜராஜேஸ்வரி வரப்ரசாதம் பெற்றவரும், மல்லிகார்ச்சுன ரென்றிற பெயருடையவருன் பத்தினியாகிய லக்ஷ்மி அம்பாள் கர்பத்தில் முத்துச்சிப்பியிலிருந்து முத்துண்டானதுபோல் பிறந்தவரும், மைலவரமென்னும் பட்டணத்தில் வசிக்கின்றாவரும், ஆசாரியத்வத்தினால் விஸ்வகர்மவம்ஸத்தில் பூஜிக்கக் கூடியவரும், சத்கர்மத்தில் எப்பொழுதும் தாற்பரியத்தோடுகூடப் பிரவர்த்தித்தவரும், சமஸ்த வித்வான்களுடைய சமூகத்தினால் ஆமோதிக்கப்பட்டவரும், ஸ்ரௌதஸ்மார்த்த கர்மங்களையடைந்து மிகுந்த கீர்த்தியுடையவரும் ஆகிய, பாபய்ய தீக்ஷிதர் அவர்களால் சபையோர்களின் கேள்விக்குத் தக்க சமாதானமான இந்த கிரந்தம் செய்யப்பட்டது.

ஸ்லோகம்:

ஆந்த்ரதேஸேஸ்திமதாம் த்விஜாநாம் விஸ்வகர்மணாம்
ப்ரஸித்த பத்ரிகாஹ்யேஷுருச்யதே லோகவிஸ்ருதி

தெலுங்கு தேசத்தில் வசிக்கப்பட்ட ஆருஷேயப்ராம்மணர்களுக்கும், விஸ்வகர்மாக்களௌன்கிற பௌருஷேய ப்ராம்மணர்களான எங்களுக்கும், ஆகானகர்மங்களைப்பற்றி சாஸ்த்ரோக்தமாகப் ப்ரஸ்நோத்தரம் நடந்ததில் நாங்கள் ஜெயமடைந்து பிரசித்தியடைந்த விஷயங்களை உலகப் பிரசித்திக்காக பாப்பய்ய தீக்ஷிதராகின்ற என்னால் விஸ்வகர்மாந்வய பூஷணமென்ற நாமத்தோடு கூட இக்கிரந்தம் சொல்லப்படுகின்றது.

ஸ்லோகம்:

வயமாதான ஸங்கல்ப ரதாப்ருந்தாவ நேஸ்திதாந்
மத்வம்ஸ்யாந் ருத்விஜ்ஸ்ஸம்யக் ஸமாஹூயாப்ருவஞ்ச

வயமாதாந ஸங்கல்ப மதுநாகர்த்து முத்யாதா:
தஸ்மின் காலேத்விஜா: கேசிதாருஷேபநயோஜ்வலா:

மத்ஸமீபம் ஸாமாகத்ய ப்ரோசுர்மாம் விநயோஜ்வலம்
ஏத்புரேது யுஷ்மாகம் கர்தும்சா தாநகர்மது

ஆசாரோ நைவதஸ்மாத்தே ப்ரம்ஹஸ்ரீ வேதபாரகை:
வேம்பட்டயந்நவ பாதோதி ஸுதாகா விபூதிபி:

வேங்கடாஜல சயநீதி த்யாதைர்வேதவி தாம்வரை:
தை: ப்ரீதிபிஸ்ஸபாம்ஸம்யக்காரயித்வாதத: பரம்
ஏதத்கர்ம ஸமாரம்பம் க்ருதஸ்சேத் ஸாதுவர்ததோ.

நாங்கள் [1]ஆதானஞ் செய்வதற்காக இஷ்டமுடையவர்களாய்ப் பந்தர்பட்டணவாசிகளும், எமது வம்ஸத்தவர்களுமான ரித்விக்குகளை அழைத்து பிரயத்தினஞ் செய்து கொண்டிருக்கிறகாலத்தில் ருஷிவம்சத்தில் யுண்டாயிருக்கிற ஆருஷேய ப்ராம்ஹணர் சிலர் எங்களிடத்திற்குவந்து இந்தப்பட்டணத்தில் இங்களுக்கு ஆதானகர்மங்களைச் செய்வதற்கு ஆசாரமில்லாதபடியினால் சாங்காத்யயனமுணர்ந்த பிரம்ம சொரூபியாயும், வேம்படி வம்ஸமென்கிற சமுத்திரத்திற்குப் பூரணச் சந்திரனைப்போன்றவர்களும், வேதவேதாந்த பாரகர்களுமாய் பிரகாசியாகின்ற வேங்கடாஜலசயனி அவர்களால் சபைசேர்ந்து, அவர்களுக்குத் திருப்திசெய்வித்து இந்தகர்மத்தை நீங்கள் செய்வீர்களாகில் சமஸ்த பெரியோர்களும் ஆமோதிப்பார்களென்று சொன்னார்கள்.

பிறகு வேங்கடாஜலசயனி அவர்கள் கிருகத்தில் சபை கூடினார்கள். அந்த சபைக்கு வேதாத்யயன பாரகர்களாயும், தர்மசாஸ்திரமுணர்ந்தவர்களாயும் [2]பௌன்டரீ காந்தமான [3]ஸ்ரௌதகர்மங்களைச் செய்தவர்களாயு முடையமத்தூரி சுப்பன்னஸ்ரௌதியவர்களும், தேஜஸோடுகூடின நாகேஸ்வர கனபாடியவர்களும், ராயப்போலூர் யஜ்ஞன்ன சாஸ்திரியவர்களும், இன்னும் வித்வசிரோமணிகளும், பெரியோர்களும், விஜயஞ்செய்தார்கள். அந்த சபையில் நடந்த உத்தர ப்ரதியுத்தரங்களின் விபரங்களை இதில் எழுதப்பட்டிருக்கிறது.

சபையோர்களான ஆருஷேய ப்ராம்மணர்களுடைய முதலாவது பிரஸ்ணை ஆரம்பிக்கப்படுகின்றது.

கேள்வி:

நீங்கள் இந்த ஆதானகர்மங்களைச் செய்கிறதற்கு அதிகாரமில்லை. அப்படியிருக்கும்பக்ஷத்தில் அந்த அதிகாரத்தை வேதசாஸ்திரபுராணங்களிலிருந்து எடுத்துக்காட்டுவீராகில் அங்கீகரிப்போமென்று கூறினார்கள்.

மேற்சொல்லிய கேள்விக்கு பிரம்மஸ்ரீ கோஸூரி பாபய்ய தீக்ஷிதர் முதலானவர்களுடைய சமாதானம் வருமாறு.

உத்தரம்:

யஜுர்வேத மந்திரத்திரபிராம்மணம் பிரதமாஷ்டகம் ஆதானபன்னத்தில் பிரம்மவம்சத்தில் ஜனனமானவர்களுக்குச் சொல்லப்பட்ட யாஜமான(யாகமந்திரம்) மந்திரங்களில் ஆங்கிரச கணசம்க்ஞைகளான பிராம்மணர்களுக்கு

ஸ்ருதி:

ஆங்கீரஸாம் த்வாம் தேவாநாம் வ்ரதபதே
வ்ரதேநாததீதமீத் யங்கிரஸாமிதி

---

1 ஆதானம்- அக்னிஷ்டோமத்திற்குமுன் செய்யத்தகுவதும், த்ரேதாக்னி சம்பந்தமானதும், பசுவதமில்லாததும், அக்னி ஹோமத்திற்கு ஹேதுபூதமான ப்ரதமத்தில் செய்யப்பட்ட ஓர்வித யாகம்.

2 பௌண்டரீகம்- யக்ஞத்திலொன்று, 3 ஸ்ரௌதகர்மங்கள்- அக்னிஸ்டோமாதி ஸமஸ்த யக்ஞங்கள்

ஆங்கீரஸாந்த்வா-என்ற மந்திரத்தினாலும் பிருகு கணசம்க்ஞைகளான பிராம்மணர்களுக்கு.

ஸ்ருதி:

> ப்ருகூணாம்த்வா தேவாநாம் வ்ரதபதே
> வ்ரதேநாததீதமீத் பார்க்வஸ்யேதி

ப்ருகூணாம் தேவாநாம்-என்ற மந்திரத்தினாலும் அந்தப்பிரகாரம் விஸ்வகர்ம சந்ததிகளாகிய பிராம்மணர்களுக்கு ரிபுகணசம்க்ஞையாக.

ஸ்ருதி:

> ரூபூணாந்த்வா தேவாநாம் வ்ரதபதே
> வ்ரதேநாததாமீதி ரதகாரஸ்யேதீச

ரிபூணாந்த்வா-என்ற பந்திரத்தினாலும், யாஜமானமந்திரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றது.

நாங்கள் ரிபுகணசம்க்ஞைகளானதற்கு ருக்வேத சம்ஹிதை ப்ரதமாஷ்டகம் ஸப்தமாத்தியாயம், ஷோடசாநுவாகம்ரிபவோஜகதி.

ஸ்ருதி:

> ஸௌயங்நாரௌவஸூரஸக்ஷுஸ இதி

ருக்வேதத்திலிருக்கப்பட்ட [1]சௌதந்வநா என்னும் மந்திரமே பிரமாணமாயிருக்கிறது. ஆனதினால் இந்த இரண்டு வேதங்களினாலேயே எங்களுக்கு இந்த கர்மாதிகார மிருக்கிறதென்று சொல்லவே அதற்கு,

சபையோர்களுடைய இரண்டாவது பிரஸ்நம் ஆரம்பிக்கப்படுகிறது

கேள்வி:

ருக்யஜுர் வேதத்தில் இருக்கப்பட்ட இந்த யாஜமான அதிகாரசித்தியை, அதாவது யாகாதிகாரம் சித்தித்திருக்கின்றதை நாங்கள் அங்கீகரித்தோம், ஆனாலிந்தப்பட்டணத்தில் நெடுநாளாக ஆசாரமில்லாததினாலும் இந்தயாக அநுஷ்டாநம் உங்களிடங்களில் காணப்படாததினாலும், இதற்குத் திருஷ்டாந்த பூர்வமாகத் தெரிவிக்கவேண்டியதென்றும் கேட்டார்கள்.

உத்தரம் ஸ்மிருதி:

> யஸ்யவேதஸ்யவேதீச விச்சித்யேதே த்ரிபூருஷம்
> ஸவைதுர்ப்ராம்ஹணோநாம ஸர்வகர்ம விசர்ஹித:

நியாய சாஸ்திரத்தில் (யஸ்யவேதஸ்ச) என்னும் வசனப்பிரகாரம், மூன்று தலைமுறைவரையில் எந்த ப்ராம்ஹணனாகிலும் வேதாத்யயனஞ் செய்யாமற் போனாலும் அந்தக்ருஹத்தில் யாககுண்டங்கள் முதலான வேதிகாலங்கார மில்லாவிடினும், அவனுக்கு [2] தௌர்ப்ராம்மண்யம் சித்திக்குமென்றும், சமஸ்த கர்மங்களுக்கும் புரம்பாவானென்றுங் கூறப்பட்டிருக்க, ஏழுதலைமுறைவரைக்கும், வேதாத்தியயனம் செய்யாமலும், வேதிகாலங்கார மில்லாமலுமாகிய க்ருஹத்தினிடத்தில் உத்தம்னான எட்டாவது புருஷன் பிறப்பானாயின் அந்த பிராம்ஹணனுக்கு அதிகாரமுண்டாகுமா, இல்லாமற் போகுமா என்கிற சந்தேகமுண்டானவிடத்தில் சமஸ்தபெரியோர்களும் விசாரித்து இவன் பலானருஷிகணசம்க்ஞையினால் சேர்ந்தவனானபடியால் இவனுக்கு அந்த தர்மப்பிரகாரம், கர்மங்களைச்செய்யத்தக்கதென்று ஆக்ஜைகொடுக்கிறார்கள். ஆகையினால், எங்களிடத்திலும் அப்படிப்பட்ட தர்மமுண்டென்பதாக நிச்சயித்திருக்கிறோமென்று சொல்லவே அதற்கு சபையோர்களின் மூன்றாவது ப்ரஸ்நம் ஆரம்பிக்கப்படுகிறது.

கேள்வி:

ஆசாரமில்லையென்கிற சந்தேகத்திற்குச் சமாதானம் வந்தது. நீங்கள் சைவபாவமாக யிருப்பதனால் உங்களுக்கு இந்த யாக கருமம் செய்ய அதிகாரமில்லையே என்று கேட்டார்கள்.

---

1 சௌதந்வநா- சுதன்வாசமபந்தம் சௌதந்வா விஸ்வகர்மா பிரஜாபதியின் பெயரென்று சப்தஸ்தோமங்களை நிதிமுதலான பிரதான நிகண்டுகளில் பிரசித்தமாயிருக்கிறது.
2 தௌர்ப்ராம்மண்யம் - மூன்று தலைமுறைவரையில் யாகஞ்செய்யாமலிருக்கிற க்ஷீணப்ராம்மணத்வம்

உத்தரம்:

கிருஷ்ண யஜுர் சம்மிதை காண்டம்-4, ப்ரஸ்நம்-6, பஞ்சாதி-6

ஸ்ருதி:

யைமா விஸ்வாபுவாநி ஜுவத் ருஷிர் ஹோதா
நிஷஸாதா பிதாந: ஸஆஸிஷா த்ரவிண மிச்சமாந:

பரமச்சதோ வரா ஆவிவோ விஸ்வகர்மா மநஸா
யத்விஹாயா தாதாவிதாதா, பரமோத ஸந்த்ரு,

தேஷா மிஷ்டாநீ ஸமிஸாமதந்தி யத்ர சப்த
ருஷீந் பர ஏகமாஹு: யோந:, விதாஜநிதா
யோவிதாதா யோநஸ்ஸதோ அப்யாஸஜ்ஜஜாந.

(யஇமாவிஸ்வா) என்னும் இந்த ஸ்ருதிக்கு வித்யாரண்ய பாஷ்யார்த்தத்தின் கருத்து, விஸ்வகர்மாவாகிர பரமேஸ்வரரானவர் பிரளயகாலம் வந்தவுடன், பூமி முதலான சமஸ்தத்தையும், தன்னுடைய ஹோமாக்கினியை ஆத்மஸமாரோபணஞ் செய்வதுபோல க்ரஹிக்கிறவிஷயங்களை அறியக்கூடிய சர்வக்ஞராயும், சம்சாரூபமாகிற ஹோமத்தைச் செய்விக்கும்கர்த்தாவாகிற ஹோதாவாயும், யக்ஞகர்த்தராயும், நமதுபிதாவாயும், ஸ்வயமாயுண்டானவராயும் தன்னைத்தவிரவேரில்லாதவராயும், ஏக ரூபமாயுமிருக்கிறார். இந்தப்பிரகாரம் சமஸ்தலோகங்களையும், நம்மெல்லோரையும் அபகரித்துக்கொண்டு, அந்த ஏகரூபத்தோடு விஸ்வகர்மாவானவர் எல்லாரூபமுந் தானாகினாரென்று சொல்லுகிற ஸ்ருதி வாக்கியத்தை அநுசரித்து, இரண்டாவது ஸ்ருஷ்டிக்கவேண்டுமென்று இச்சையுடையவராய்த் தன்னுடைய அநுக்ரஹத்தினால் நானாரூபங்களையும் பிரஜைகளோடு கூடினதாயுமிருக்கிறஜகத்தை மீண்டும் சிருஷ்டிக்கிறார்.

_அன்றியும் சமஸ்த ஜகத் போகத்தையும் அபேக்ஷித்தவராய்த் தனது அத்விதீய பரமார்த்தமாயுள்ள ஏகரூபத்தைப் பிரகாசம் செய்துகொண்டுதான் தானே சரீரமத்தியிலிருக்கிற ஹ்ருதய கமலத்தில் ஜீவரூபமாகப் பிரவேசிக்கிறார். லோக விஷயங்களான ஸ்ருஷ்டி, திதி, சம்ஹார ரூபங்களாயுள்ள கிருத்தியங்கள் எவருக்கிருக்கிறதோ அவரையே விஸ்வகர்மாவென்றும், ஏகரென்றும் சொல்லப்படுகின்றாது.

ஸ்ருஷ்டி, திதி, சம்ஹாரங்களே லீலையாக வைத்துக்கொண்டிருக்கிற விஸ்வகர்மாவானவர் மனோசங்கற்பமாத்திரத்தினால் சாதனமின்றி ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறவராயும், சம்ஹரிக்கிறவராயும் இருக்கிறார். மேலும் சர்வக்ஞராயும் ஈஸ்வரராயுமிருக்கிற விஸ்வகர்மாவினிடத்தில், மரீசி, அத்திரிமுதலான சப்தரிஷிகளும் ஸ்ருஷ்டிக்குமுன்னமே ஐக்யமாயிருந்து ஸ்ருஷ்டி காலத்தில் உற்பவமானார்களென்றும் வேதாந்த பாரகர்கள் கூறுகின்றார்கள்.

இந்த விஸ்வகர்மாவானவர் சப்தரிஷிமுதலானவர்களுடைய அபேக்ஷைகள் எது எது உண்டோ அவைகளை இச்சாமரத்தில் ஸ்ருஷ்டித்துக் கொடுக்கிறதினால் அந்த சப்தரிஷிகளானவர் மிகவும் சந்தோஷத்தையடைகிறார்கள். சிருஷ்டிகர்த்தாவாகிற விஸ்வகர்மாவானவர் தம்மை உண்டுபண்ணினவரென்பதற்கும் சந்தேகமில்லை என்றும், இவருடைய சரித்திரமானது அளவிடக்கூடாததாகவு மிருக்கிறதென்றும், ஸமஸ்தஜகத்தையும் சிருஷ்டித்தவரே நமக்கு உணவாதி சமஸ்தவஸ்துக்களையும் சிருஷ்டித்தாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவன்றியும் மஹாபாரதம் ஆதிபர்வாந்தர்க்கதமான சம்பவ பருவம் ஆறாமத்தியாயத்தில்,

ஸ்லோகம்:

மநுஷ்யாஸ்சோ பஜீவந்தி யஸ்யஸிலயாத் மஹாத் மந:
பூஜயந்திச யம் நித்யம் விஸ்வகர்மண மவ்யயம்.

மநுஷ்யாச்சோபஜீவந்தி என்னும் வசனத்தால் மஹாநுபாவனாகிய விஸ்வகர்மாவின் சிற்பங்களாகிற தொழிலை அவருடைய வம்ஸத்திலேயுண்டா யிருக்கிறவர்கள் செய்கிறதினால் சமஸ்த மனிதர்களும் உபஜீவனம் செய்கிறார்கள். அழிவில்லாதவரா யிருக்கிற விஸ்வகர்மாவை நித்தியம் பூஜிக்கவுஞ் செய்கிறார்கள் என்றும் கூறியிருக்கிறது. மேலும்,

யஜுர் வேதம் 4-ம் காண்டம் 3-வது பிரஸ்நம் 5-வது பஞ்சாதி,

<u>ஸ்ருதி:</u>

ப்ராசீதிஸாம் வஸந்தருதூநா மக்நிர்தேவதாப்ரஹ
த்ரவிணம், த்ரிவ்ருத்ஸ்தோமஸ்ஸஉ பஞ்சதஸவத்மநீஸ்
த்ரிய விர்வய: க்ருதமயாநாம் பரோவாதேவாதா <u>ஸ்ஸாநகருஷீ:</u>

தக்ஷிணாதிஸாம் க்ரீஷ்மருதூநா மிந்த்ரோதேவதா
க்ஷத்ரம் த்ரவிணம் பஞ்சதஸஸ்தோ மஸ்ஸஉஸப்த
தஸ வர்தநீர்தித்ய வாட்வய ஸ்த்ரேதாயாம் தக்ஷிணாத்
வாதோவாத <u>ஸ்ஸநாதநருஷி:</u>

ப்ரதீசீதிஸாம் வர்ஷருதூநாம் விஸ்வே தேவா
தேவதா விட்த்ரவிணம் ஸப்த தஸஸ்தோமஸ்ஸஏ கவி
க்ஸ வர்தநி ஸ்த்ரி வ்ருத் ஸ்தோமயோ த்வாபரோ யா
நாம் பஸ்சாத்வர் தேவாதோ <u>பூவநருஷி:</u>

உதீசீதிஸாம் ஸரத்ருதூனாம் மித்ராவருணௌ
தேவதா புஷ்டம் த்ரவிணமேகவிக்ஸஸ்தோம ஸ்ஸஉ
த்ரிணவவர்தநீ ஸ்துர்ய வாட்வய ஆஸ்கந் தோயாநாமுத்
தராத் வாதோவாத: <u>ப்ரத்நருஷி:</u>

ஊர்த்வாதிஸாக் ஹேமந்த ஸிஸிரா வ்ருதூநாம்
ப்ருஹஸ்பதிர் தேவதா வர்சோத்ரவிணம் த்ரிணவஸ்
தோமஸ்ஸ: உத்ரயஸ்த்ரிக்ஸவர்தநீ: பஷ்லவாட்வயோ
பிபூரயாநாம் விஷ்வக் வாதோ வாதஸ்<u>ஸுபர்ணருஷி:</u>

பிதர: பிதாமஹா: பரேவரே தேந: பாந்து தே
நோ வந்த்வஸ்மிந் ப்ரம்ஹந் நஸ்மிந் க்ஷத்ரே ஸ்யா மா
ஸிஷ்யஸ்யாம் புரோதாயா மஸ்மிக் கர்மண் யஸ்யாம்
தேவ ஹூத்யாக் ஸ்வாஹா

இந்த (ப்ராசிதிசாம்) என்னும் ஸ்ருதிக்கு வித்யாரண்ய பாஷ்யார்த்தத்தின் கருத்து,

யஜனாதிகர்மங்களில் கிழக்கு முதலான திசைகளில் இஷ்டகமாகிற செங்கலைப் போடுகிறகாலத்தில் ப்ரவர்த்திக்கிற (ப்ராசீதிசாம்) என்னும் மந்திரங்கள் ப்ரதிபாதிக்கப்படுகின்றன.

கிழக்கு திசைக்கு சானகரிஷி

கிழக்கு திக்கில் இஷ்டங்களை யேற்படுத்துகிற காலத்தில் பிரவர்த்தித்து இஷ்டகங்களைப்பார்த்துச் சொல்கிற மந்த்ரார்த்தம் என்னவென்றால்:

ஓ இஷ்டகமே! கிழக்குத்திக்கும், ருதுக்களில் வசந்தருதுவும் அதனுடைய சொரூபமும், தேவதைகளில் அக்கினியும் அந்த சொரூபமும், தனங்களில் விசிஷ்டர்களாயிருக்கிற பிராம்மண்ய சொரூபதனமும், தேவர்களை ஸ்தோத்திரம்பண்ணப்பட்ட மந்திரங்களில் த்ரிவிருத் என்கிற [1] ஸ்தோமமும், அதனுடைய சொரூபமும், அந்த த்ரிவிருத் ஸ்தோம மந்திரம் பரிக்ஷித்துக்களால் [2] பிரவர்த்தித்த பிறகு, மேல் ஆஜ்யஸ்தோத்திரத்திலே பஞ்சதஸஸ்தோமம், பிரவர்த்தித்தும், அந்த பிரகாரம் பிரவர்த்திக்கச் செய்யப்பட்ட மந்திரசக்தியும், வயதுகளில் ஒன்றரை வருஷங்களின் சொரூபவயதும், யுகங்களில் கிரேதாயுகமும், வாயுக்களில் கீழ்காற்றும், ரிஷிகளில், சானகரிஷியும் நீயே, அந்த சானகரிஷியும் மகாநுபாவரா யிருக்கிறார்.

தக்ஷிணதிசைக்கு சநாதனரிஷி

தக்ஷிணதிக்கில் இஷ்டங்களை யேற்படுத்துகிற காலத்தில் பிரவர்த்திக்கிற மந்த்ரார்த்தம்.

ஓ இஷ்டகமே! திக்குகளில் தக்ஷண திக்கும், ருதுக்களில் க்ரீஷ்ம ருதுவும், அதனுடைய சொரூபமும், தேவதைகளில் இந்திரனும் அந்த சொரூபமும், தனம்களில் க்ஷத்ர சொரூபதனமும், ஸ்தோமங்களில் பஞ்சதஸ்ஸதோமமும், அதன்சொரூபமும், அதில் மாத்தியந்தினபவமான ஸ்தோத்திரங்களில் பஞ்சதஸ்தோம மந்திரங்களிச் சேர்த்து அநுஷ்டித்து மேல்வரும் பிரஷ்டடத்தோத்திரங்களிலும்

---

1 ஸ்தோமம்- கூட்டம், 2 பிரவர்த்தகம்- காரியத்தில் பிரவேஸித்தல்.

சப்ததஸஸ்த்தோம மந்திரங்களை அனுஷ்டிக்கவேண்டும். அப்பொழுது அந்த மந்திரந்தானே பஞ்சத ஸஸ்தோமத்தையும், சப்ததசஸ்தோமத்தையும் பிரவர்த்தகங்கள் செய்யப்பட்டுகிறது. அந்த ப்ரவர்த்தனாமந்திர சக்தியும் வயதுகளில் இரண்டு வருஷங்களின் சொரூபவயதும், யுகங்களில் திரேதாயுகமும், வாயுக்களில் தென்காற்றும், ரிஷிகளில் சநாதன ரிஷியும் நீயே. அந்த சநாதன ரிஷியும் மஹாநுபாவர்.

மேற்கு திசைக்கு அபுவனரிஷி

மேற்குதிக்கில் இஷ்டங்களை யேற்படுத்துகிற காலத்தில் பிரவர்த்திக்கிற மந்த்ரார்த்தம்.

ஓ இஷ்டகமே! திக்குகளில் மேற்கு திக்கும், ருதுக்களில் வருஷ ருதுவும், அதனுடைய சொரூபமும், தேவதைகளில் விஸ்வதேவதைகளும் அந்த சொரூபமும், தனங்களில் வைசிய சொரூபதனமும், ஸ்தோமங்களில் சப்தசதஸ் தோமமும், அதன்சொரூபமும், அதில் இருபத்தோறாவது ஸ்தோமப்ரவர்த்தகமும், அதன்சக்தியும், வயதுகளில் மூன்று வருஷங்களின் சொரூபவயதும், யுகங்களில் துவாபரயுகமும், வாயுக்களில் மேல்காற்றும், ரிஷிகளில்லபுவன ரிஷியும் நீயே. அந்த அபுவனரிஷி மிகுந்த பிரபாவத்தோடு கூடின மஹாநுபாவர் தபசம்பன்னர். துவஷ்டாக்களுக்கு யாகமுதலானவைகளைப் பிரவர்த்தி பண்ணிவைக்கிற த்வஷ்டுச் சம்மந்தமானவர்.

வடக்கு திசைக்கு பிரத்னஸரிஷி

வடக்குதிக்கில் இஷ்டங்களை யேற்படுத்துகிற காலத்தில் பிரவர்த்திக்கிற மந்த்ரார்த்தம்.

ஓ இஷ்டகமே! திக்குகளில் உத்தர திக்கும், ருதுக்களில் சரத்ருதுவும், அதனுடைய சொரூபமும், தேவதைகளில் மித்ராவருணர்களும் அந்த சொரூபமும், தனங்களில் சூத்திரசொரூப தனமும், ஸ்தோமங்களில் இருபத்தோராவது ஸ்தோமமும், அதன்சொரூபமும், அதில் இருபத்தேழாவது ஸ்தோமப்ரவர்த்தகமும், அதன் சக்தியும், வயதுகளில் மூன்றரை வருஷங்களின் சொரூபவயதும், யுகங்களில் கலியுகமும், வாயுக்களில் வடகாற்றும், ரிஷிகளில் ப்ரத்ன ரிஷியும் நீயே. இந்த ப்ரத்னரிஷி மகாதபசி.

ஊர்த்வ திசைக்கு சுபர்னரிஷி

ஊர்த்வதிக்கில் இஷ்டங்களை யேற்படுத்துகிற காலத்தில் பிரவர்த்திக்கிற மந்த்ரார்த்தம்.

ஓ இஷ்டகமே! திக்குகளில் ஊர்த்வ திக்கும், ருதுக்களில் ஹேமந்தசிசிரங்களும், அதனுடைய சொரூபமும், தேவதைகளில் பிரகஸ்பதியும் அந்த சொரூபமும், தனங்களில் நான்குவர்ணங்களில் பலமுள்ள சொரூப தனமும், ஸ்தோமங்களில் முப்பத்திமூன்றாவது ஸ்தோமப்ரவர்த்தமும், அதன் சக்தியும், வயதுகளில் நான்குவயதுகளின் சொரூபவயதும், யுகங்களில் சமஸ்தமான தர்மங்களையும் அவமானம் பண்ணப்படுகிற யாதொருகாலமிருக்கிறதோ அந்தகலியுகமுடிவும், வாயுக்களில் சுழல்காற்றும், ரிஷிகளில் சுபர்ன ரிஷியும் நீயே. இந்த சுபர்னரிஷி மஹாநுபாவர், மஹாதவசம்பன்னர்.

இதுவுமல்லாமல் (பிதர:-பிதாமஹ:) என்றால் ஓ! பிதாமார்களே-ஓ! பிதாமஹாக்களே, இன்னமும் இவர்களல்லாதவராயிருக்கிற ஓ! சகோதரர்களே, ஓ! குமாரர்களே தேவதா சொரூபர்களாக நீங்கள் எவ்வளவுபேர்கள் உண்டோ அவர்களெல்லாம் எங்களுக்கு நேரிடும் பயத்தை யொழித்து எங்களைக் காப்பாற்றுவீர்களாக. அன்னவஸ்திராதிகளில் போஷிப்பீர்களாக. இந்த ப்ராமணஜாதியினிடத்திலும், இந்தப் பிரார்த்தனையினாலும், இந்தராஜ பௌரோகிதவிருத்தியினாலும், தேவர்களையழைக்கிற இந்தக் கர்மங்களிடத்திலும், ஓ இஷ்டகமே! உன்னை நினைக்கிறோம். இந்தப்பிராகாரம், ஐந்து ஐந்து இஷ்டகோபதானத்திலும், ஸானக, ஸனாதன, அபுவன, ப்ரத்ன, சுபர்ண என்னும் ஐந்து ரிஷிகளை அவர்கள் உற்பவித்த திக்குகளாகிற அந்த ஸ்தலங்களில் ஆராதித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகையால் எங்கள் கோத்திரத்தின் மூலரிஷிகளாயிருக்கிற இந்த ஐந்துரிஷிகளை இந்தச் சுருதியில் பிரதானமாக சொல்லப் பட்டிருக்கின்றது, இதுவுமன்றி ஸ்காந்த புராணம், நாகரகண்டத்தில்,

<u>ஸ்லோகம்:</u>

ஏக: பஞ்சாநநோ விஸ்வகர்மா யக்ஞே ஷடானந
முகேப்ய ஸ்தஸ்ய பஞ்சப்ய: குமார: பஞ்ச ஜக்ஜிரோ
வதநேப்ய பவம் ஸ்தேஷாம் பஞ்சபஞ்ச குமாரகா:
ஸதஞ்ச விம்ஸதி பஞ்சவம் ஸஜா விஸ்வகர்மண:
மநுர்மயஸ்ததா த்வஷ்டா ஸில்பிர் விஸ்வக்ஞ ஏவச
பஞ்சைதே தேவருஷ்யோ விஸ்வகர்ம முகோத்பவா:

(ஏகப்பஞ்சாநோ) என்னும் வாக்கியத்தால் ஹே! சுப்ரமண்யரே ஐந்துமுகத்தோடு கூடின விஸ்வகர்மாவான ஒருவர் ஸ்வயமாயுண்டானார், அவருடைய ஐந்து வதனங்களினின்றும் மநு, மய, த்வஷ்டா, சில்பி, விஸ்வக்ஞர்களான, ஸானக, ஸநாதன, அபுவன, ப்ரத்ன, சுபர்னரென்கிற ஐந்து தேவரிஷிகளும், விஸ்வகர்ம சந்ததிகளாக உற்பவித்து புத்திரர்கள் வீதம் நூற்றிருபத்தந்து புத்திரர்கள் உண்டானார்கள். இவர்கள் தேவரிஷிகளாயு மிருக்கிறார்கள்.

இந்தப் பிரகாரம் ஸ்மிருதிகளினால் நாங்களும் விஸ்வகர்மாவினுடைய சந்ததிகளாகத்தானே யிருக்கின்றோம் என்று திருஷ்டாந்தம் காண்பிக்கப்பட்டிருக்கிறது. மேலும் விஸ்வகர்ம முகோத்பவர்களான இந்த ஐந்து ரிஷிகள் சகிதமாக நூற்றிருபத்தைந்து கோத்திரங்களுடைய [1]பிரவரகண்டம் வியாசராலே சொல்லப்பட்டிருக்கிறது. மேலும்,

ஸ்காந்தம் நாகரகண்டம்

<u>ஸ்லோகம்:</u>

> விஸ்வகர்ம ஸுதாஸ் சைதேத்வம் ஸ்யாநாம்
> விஸேஷத: வர்ஷே கர்பாஷ்டமேசைவ ஹ்யுநீதிக்ரியாமதா,
> கர்தவ்யம்தத் விஸேஷேண ஹ்யாசார்யேணஸமாதிநா.

(விஸ்வகர்ம ஸுதாஸ்சைதே) என்னும் வசவனத்தால் விஸ்வகர்ம ப்ரஜாபதியின் சந்ததிகளுக்கு கர்ப்பாஷ்டமத்தில் அதாவது கர்ப்பமுதல் எட்டவது வயதில் உபநயன கர்மத்தைச் செய்யவேண்டுமென்றும், அதிலும் தத்வம்ஸஜாளானவர்களில் வைதீகக் கிரியைகளை யறிந்தவராயும் பிரம்ம நிஷ்டராயும் ஆசார்யத்வம், பௌரோகித்யங்கள் வகித்திருக்கிறவர்களாயும் இருக்கப்பட்டவர்களாலிந்த உபநயன கர்மத்தச் செய்து கொள்ளுகிறது வேதசம்மத மென்றும், விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நியாயத்தினால் கர்ப்பாஷ்டமத்தில் உபநயன கர்மமும், அதன் பிறகு விவாஹ முதலான கர்மங்களும் செய்கிறதற்கு அதிகாரமிருக்கிறது. அந்தப் பிரகாரம் விவாஹஞ் செய்த பின்னர் கிருஹஸ்தர்கள் இருக்கவேண்டிய ஒழுக்கங்களை சிற்பசாஸ்திரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

சிற்பசாஸ்திரம்,

<u>ஸ்லோகம்:</u>

**விஸ்வகர்ம குலஸ்ரோஷ்டோ தர்மக்ஞோ வேதபாரக: ஸாமுத்ர கணிதா காஞ்ச ஜ்யோதிஸ்ஸாஸ்த்ரஸ் யசைவஹி, லோகபாஷாண காஷ்டாநாம் இஷ்டகாநாஞ்ச ஸங்கலே, ஸுதாநாம் சித்ரகாநாஞ்ச வித்யாசௌஷஷ்டிமர்மக: ஸூத்ரசாஸ்த்ர க்ரியாப்ராக்ஞோவாஸ்து வித்யாப்திபாரக:, ஸைவவைஷ்ணவ ஸாக்தேய காணபத்யஞ்ச ஸௌரவம், பௌத்தகம் சாபிஷட்தர்ஸம் நிர்மிதம் ஸ்தாபிதம்ததா, ஸ்ரௌத ஸ்மார்த க்ரியாப்ராக்ஞோ மந்த்ரதந்ரார்த கோவித:, ஸங்கல்பஞ் சாநுவாகஞ்சமார்ஜனஞ்சாக மார்ஷணம், பஞ்சாங்க லக்ஷணம் ஸ்நானம் ஸந்த்யாதி, ஜபலக்ஷணம் பஞ்சயக்ஞும், மஹாத்யாணம் வைஸ்வதேவஞ்ச ஸந்தம், ஸத்யவாக்யஸ் ஸதாசாரோ வித்யாகுல புத்திமான், சர்வலக்ஷண ஸம்பந்ந ஸர்வாவஸ்தா ஸுஸோபித:, ஆரோக்யே சப்ரமாதேச ஸப்தவ்யஸநவர்ஜித: வேதகர்மா ஸதாசா ஏகபத்நீ வ்ரதஸ்ததா, மநுஸூத்ரே மகாப்ராக்ஞோ குணவான் ஸத்யவாசக:, ஏவங்குணகளைர்யுக்த: ஸில்பாசார்யஸ்ய லக்ஷணம்.**

(விஸ்வகர்ம குலஸ்ரோஷ்டோ) என்னும் வசனப்பிரகாரம் விஸ்வகர்ம வம்சத்தவர்கள் ஜாதியில் சிரேஷ்டர்களென்றும், இவர்கள் தர்மசாஸ்திரங்களும், பூர்ணமான வேதாத்தியானமும் சாமுத்ரீகமும், கணிதசாஸ்திரமும், சந்தஸ்ஸும் அப்பியசிக்க வேண்டுமென்றும், லோஹ, பாஷாண, காஷ்ட, இஷ்டி, சுதை, சித்திரமுதலான பிரவர்த்தக தர்மங்களும், அறுபத்திநான்கு வித்தையின் மர்மங்களும், நன்றாய்த் தெரிந்துகொள்ள்வேண்டு மென்றும், சூத்திரசாஸ்திரத்தின் கிரியைகளைத் தெரிந்தும், வாஸ்து வித்தையாகிற சிற்பசாஸ்திரத்தின் கரையைக் கண்டவர்களாயிருக்க வேண்டு மென்றும், சைவம், வைஷ்ணவம், சாக்தேயம், காணாபத்யம், சௌரம், பௌத்தம், முதலாகிய ஷண்மதங்களை யறிந்து தர்மநிர்மாணங்கள் செய்துஸ்தாபிக்க வேண்டுமென்றும், ஸ்ரௌதஸ்மார்த்த கர்மங்களில் ஸ்ருதிஸ்மிருதிகளினுடைய கிரியைகளை நன்றாயரிந்து பிரவர்த்தகத்வமும், மந்திர சாஸ்திரம், தந்திர சாஸ்திரங்களைத் தெரிந்து, அதனுடைய அர்த்தமும் தெரிந்திருக்க வேண்டுமென்றும், சங்கற்பம், ஸூக்தபடனம், மார்ஜனம், அகமர்ஷணம், தர்ப்பனம் முதலான ஐந்து அங்கத்தோடு கூடின ஸ்நானசந்தியாவந்தன முதலான ஜபம், பிரம்மயக்ஞம், தேவயக்ஞம், மஹாத்யானம், வைஸ்வதேவம் இவை முதலான சத்கர்மங்களைத் தெரிந்து அநுஷ்டானம் பண்ணவேண்டுமென்றும், ஆதானாதி கர்மப்ரவர்த்தகத்வமும், சத்தியவாக்யமும், சதாசாரமாகவும், வித்தைகளில் சாமார்த்தியமுடைய

---

1 பிரவரகண்டம்- வம்சாவிழியைச் சொல்லுகிற நூல்

கூர்மையான புத்தியுடையவர்களாகவும், சர்வ லக்ஷணங்களுடையவர்களாகவும், சமஸ்த அவஸ்தைகளிலும் சோபிக்கப்பட்டவர்களாகவும், ஆரோக்கியத்திலும், பிரமாதத்திலும் சமர்த்தர்களாகவும், அத்யாத்மதாபம், ஆகிபௌதிகம், ஆதிதைவிகம், மனம், புத்தி, அகங்காரம், முதலான காரணங்களினால் வரப்பட்ட விசனமில்லாதவர்களாகவும், வேதத்தில் சொல்லிலிருக்கிற கர்மங்களை எப்பொழுதும் ஆசாரத்தோடு செய்துகொண்டிருக்கிறவர்களாகவும், ஏகபத்தினி யுடையவர்களாகவும், மநுசூத்திரம் தெரிந்து கொள்வதில் மஹாபுத்தி யுடையவர்களாகவும், நற்குணவான்களாகவும், ஆகிய இவை முதலானவர்களோடு கூடியிருக்கவேண்டு மென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இக்காரணங்களினால் ஸ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிற கர்மாநுஷ்டானங்களில் பிரவர்த்தித்துக் கொண்டிருக்கிறவர்களென்று சொல்லப்பட்டிருப்பதனால் வைஸ்வதேவ முதலான கர்மங்களும், ஆதான முதலானவைகளும் பண்ண வேண்டுமென்று ஸ்ருதிஸ்மிருதிகளில் சித்தார்ந்தமாக ஸ்தாபிக்கப்பட்டடிருக்கிறது, இந்தப் பிரகாரம் நியாயங்களிருப்பதனால் ஸ்ரீமதகண்ட சச்சிதானந்த சொருபராயிருக்கிற சங்கராச்சாரியாராலே சித்தாந்தமான சைவமதத்தை நீங்கள் எந்தப்ரகாரம், அங்கீகரித்தீர்களோ அந்தப்ரகாரமே நாங்களும் அங்கீகரித்தோம், என்று சொல்லவே, சபையோர்களின் நான்காவது ப்ரஸ்நம் ஆரம்பிக்கப்படுகிறது.

<u>கேள்வி:</u>

சற்குரு சொரூபிகளான சங்கராசாரியவர்களினால் சித்தாந்தமான மதத்தை அங்கீகரித்து நீங்கள் விஸ்வகர்மாவிலிருந்தும் உண்டான வம்ஸமென்பதற்குச் சந்தேகமில்லை. அதை அங்கீகாரம் செய்கிறோம். அப்படியிருந்தாலும், பிராம்மணர்களுக்கு காயத்ரி [1] சந்தஸ்ஸு என்றும் க்ஷத்திரியர்களுக்குத் த்ருஷ்டுப் சந்தஸ்ஸு என்றும், வைசியர்களுக்கு ஜகதீசந்தஸ்ஸு என்றும் மூன்றுவிதமாகச் சந்தஸ்ஸுகள் வேதபாரகர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. உங்களுக்குச்சந்தஸ்ஸு சொல்லாததினால் அதற்குச் சமாதனம் சொல்லவேண்டு மென்று கேட்க,

<u>உத்தரம்:</u>

யஜூர்வேதம் மூன்றாவது அஷ்டகம் நாலாவது ப்ரஸ்நம்,

<u>ஸ்ருதி:</u>

> ப்ரஜாபதிர் விஸ்வகர்மாம கோகந்தர்வஸ்ய தஸ்யர்க்ஸா மாந்யப்ஸரஸ:

(ப்ரஜாபதிர் விஸ்வகர்மா) வென்னும் ஸ்ருதியினால் விஸ்வகர்ம ப்ரஜாபதியினுடைய மனதிலிருந்து கந்தர்வர்களும், அப்ஸரஸ்திரிகளும் உண்டானார்கள். பிறகு ருக், சாமம் முதலான வேதங்களும் உண்டாயிருக்கின்றன.

விஷ்ணுபுராணம் ப்ரதமாம்ஸம் பதினைந்தாம் அத்தியாயம்,
<u>ஸ்லோகம்:</u>

> விஸ்வகர்மா மஹாபாகஸ் தஸ்யாம் யங்ஞோப்ரஜாபதி:
> கர்த்தாஸில்ப ஸகஸ்ராணாம் த்ரிதஸாநாம் சவாதகி:

(விஸ்வகர்மா மஹாபாக) என்னும் வாக்யப்ரகாரம் மஹாபாக்யவானாயும், ப்ரஜாபதியாயுமிருக்கிற விஸ்வகர்மானவர் உண்டானார். அவர் ஆயிரம் சில்பிகளுக்குக் கர்த்தாவாயும் தேவர்களுடைய வர்த்தகியாயுமிருக்கிறார்.

ஸ்ரீ மஹாபாரதம் ஆதிபர்வம்,

<u>ஸ்லோகம்:</u>

> ப்ருஹஸ்பதேஸ்து பகிநீவரஸ்த்ரீ ப்ரும்ஹவாதிநி
> யோகஸ்க்தாஜகத் க்ருத்ஸ்நமஸக்தா விசரத்யுத
> விஸ்வகர்மா மஹாபாககஸ்தஸ்யாம் ஜக்ஞெப்ரஜாபதி:

(ப்ருஹஸ்பதேஸ்து பகிநி) என்னும் வசனத்தால் பிரகஸ்பதியினுடைய உடன் பிறந்தாளானவள் சிரேஷ்டமான ஸ்திரீயாகவும், ப்ரம்மத்தையறிந்து அதைச் சொல்லுகிறவளாகவும், ஆசையில்லாதவளாகவும், யோகசக்தை யென்கிற பெயரோடும் சமஸ்தமான லோகங்களிலும் சஞ்சரிக்ககிறாவளாகவும் இருக்கிறாள். இவளிடத்தில் மஹாபாக்யவானாயிருக்கிற விஸ்வகர்ம ப்ரஜாபதியானவர் உண்டானார்.

---

1 சந்தஸு- வாணசம்க்ஷையைக் காட்டும் இலக்ஷணம்

பாரதம்- ஸ்லோகம்:

**உத்க்ருஷ்டா முகஜா: ப்ரோக்தா: பாஹூ ஜாமத்யமாஸ்ம்ருதா, அதமா ஊருஜா: ப்ரோக்தா: பாதஜா அதமாதமா:**

(உத்க்ருஷ்டா) என்னும் வாக்யத்தால் ப்ரம்மத்தின் முகத்திலுண்டான பிராம்மணர்கள் உத்தமமான சிரேஷ்டர்கள், புஜத்திலுண்டான க்ஷத்திரியர்கள் மத்திமார்கள், தொடையிலுண்டான வைசியர்கள் அதமர்கள், பாதத்திலுண்லான சூத்திரர்கள் அதமாதமர்கள்.

ஸ்காந்த புராணம்:

ப்ரும்மணோ வதநாஜ்ஜாதோ ப்ராம்மண: பரிகீர்த்தித:,
ப்ரும்மண ஸ்தேஜஸாசைவ ப்ராம்மணோப்ரும்ஹகர்மண:,
ப்ரும்ஹக்ஞானி ப்ராம்மணஸ்சநாந்யதா ப்ராம்ஹணோபவேத்.

(ப்ரும்மணோவதநா) என்னும் வசனத்தினால் ப்ரம்மமுகோத்பவத்தர்களுக்கும், பிரம்ம தேஜஸில் பிறந்த பிரம்மகர்மமுடையவர்களுக்கும், பிரமத்தை யறிந்தவர்களுக்கும், பிராம்மண நாமதேயம் வருமேயன்றி வேறே யாதோரூபிரகாரணத்தினாலும் பிராம்மண நாமதேயம் வரமாட்டாது.

பிரம்மாண்ட புராணம்-சுவிருத காளஹஸ்திரிஷி சம்வாதெ,

ஸ்லோகம்:

"ப்ராம்மணானாம் குலம் பூர்வம்-த்வேதா விரஜிதம் சுரை :
ஆருஷேயம் பௌருஷேயஞ்ச கர்ம ஜென்ம விசேஷத :
ஆருஷேயம் ருஷிகோ த்ரேஷூ வசிஷ்யா னாஞ்சயேபவ :
ஜென்மனா ஜாயதே சூத்ர : கர்மணா ஜாய தேத்விஜ :
வேதபாடேன விப்ரஸ்யாத் ப்ரம்மஜ்ஞானேன ப்ராம்மண :
யத்விஸ்வகர்மணஸ் சாஸ்ய புருஷஸ்ய முகோத்பவம்
பௌருஷேயம் இதிக்யாதம் பஞ்சகோ த்ரம் மஹத்குலம்.

(ப்ராம்மணானாம் குலம்) என்னும் வசனத்தால் பூர்வம் தேவர்களினால் பிராம்மணர்களுடைய குலத்தை ஆருஷேயம், பௌருஷேயம் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஆருஷேயர்கள் கர்மத்தினாலும், பௌருஷேயர்கள் ஜன்மத்தினாலும் விசேஷமாகிறார்கள். ஆருஷேயரென்பது வசிஷ்டாதிரிஷி கோத்திரத்தவர்கள், ஹேமுனிசிரேஷ்டரே! இந்த விஷயத்தில் ஜன்மத்தினால் சூத்திரரென்றும், கர்மத்தினால் திவிஜானென்றும், வேத பாடத்தினால் விப்பிரரென்றும், பிரம்மஞானத்தினால் பிராம்மணரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. விஸ்வகர்மாவென்ற புருஷனுடைய முகத்திலிருந்தும் உண்டானவர்களைப் பௌருஷேயப் பிராம்மணர்களென்றும், ஐந்துரிஷி சம்பந்தமான பெரியகுலமென்றும் பிரசித்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப்பிரகாரம் ஸ்ருதி ஸ்மிருதி புராணங்களினால் விஸ்வகர்மாவை விசேஷித்துப் பிரஜாபதிபென்றும் கூறியிருப்பதால், தத்வம்சஜர்களான நாங்கள் பிராம்மணர்களாகவேயிருக்கிறோம். அன்றியும், ப்ரம்மமுகோத்பவர்களாகியும், உத்தமர்களாகவும், ஜன்மத்தினால் விசேஷித்தவர்களாகவும் இருக்கிற எங்களுக்குப் ப்ராம்மணசம்பந்தமான கருமமடையப்பட்டிருக்கிறதே யல்லாமல் இதரர்களான க்ஷத்திரிய வைசியர்களின் சந்தஸ்ஸுகளும், நாமங்களும் எப்படியுண்டாகும்? அப்படியுண்டாகமாட்டாது. ஆனதினால் பிராம்மணஜாதி சந்தஸ்ஸுகளும், பிராம்மண ஜாதி நாமங்களும் எங்களுக்குச் சித்தாந்தமாயிருக்கிறதென்று சொல்லவே,

சபையோர்களுடைய ஐந்தாவது ப்ரஸ்நம் ஆரம்பிக்கப்படுகிறது.

கேள்வி:

நீங்கள் விஸ்வகர்மப்ரஜாபதியின் சந்ததிகளான பிராம்மணர்களென்று கூறியபிராமணத்தை அங்கீகரித்தோம். இதரஜாதியார்களாகிய க்ஷத்திரிய வைசிய தர்மங்கள் உங்களிடத்திலில்லை ஆகிலும் நீங்கள் இந்தயாக கர்மத்தைசெய்து வைப்பதற்கு எப்படி அதிகாரமுண்டாயிற்றென்கிற சந்தேகமிருக்கிறதென்றும் கேட்க அதற்கு

உத்தரம்:

யஜுர்வேதம் இரண்டாவது அஷ்டகம் ஐந்தாவது பிரஸ்நம்,

ஸ்ருதி:

> விஸ்வ ரூபோவை த்வஷ்டர:
> புரோஹிதோ தேவானாமாஹீத்

இந்த (விஸ்வரூபோ) என்னும் ஸ்ருதிக்கு வித்யாரண்ய பாஷ்யத்தின் கருத்து

அனேக ரூபங்களாயும், மூன்று சிரசுகளோடும் துவஷ்டு ப்ரஜாபதியின் புத்திரராயு மிருக்கிற விஸ்வரூபரானவர் தேவர்களுக்குப் பௌரோகிதஞ் செய்தார்.

புருஷஸூக்தம், ஸ்ருதி:

> விஸ்வகர்மண ஸ்ஸமவர்த்ததாதி
> தஸ்யத்வஷ்டா விதத்ரூபமேதி

(விஸ்வகர்மண) என்னும் வசனத்தால் விஸ்வகர்மா சமஸ்தத்திற்கும் முன்னதாக உண்டானவர், அந்த விஸ்வகர்மாவிலுண்டான ரூபமே த்வஷ்டு ப்ரஜாபதியின் ரூபம்.

ஸ்ரீ மஹாபாரதம் உத்தியோகபர்வம் பதினோராவது அத்யாயம்,

ஸ்லோகம்:

> த்வஷ்டு ப்ரஜாபதிர் ஹ்யாஹீத் தேவஸ்ரேஷ்டோ மஹாதபா:,
> ஸபுத்ரோ வைத்ரி ஸிரஸோ விஸ்வரூபாந் மஹாத்யுதே.

(த்வஷ்டுப்ரஜாபதி) என்னும் வாக்கியப்ரகாரம் தேவர்களில் சிரேஷ்டராயும், மஹா தபசியாயுமிருக்கிற த்வஷ்டுப் பிரம்மாவானவர் உண்டானார். அந்த த்வஷ்டுப் பிரம்மாவுக்குப் புத்திரராயும் மூன்று சிரசுகளோடும் அநேக ரூபங்களோடும் மஹாதேஜஸோடும் கூடினவராயுமிருக்கிற விஸ்வரூபர் உண்டானார்.

பாகவதம் ஆறாவது ஸ்கந்தம் ஆறாவது அத்தியாயம்,

ஸ்லோகம்:

> த்வஷ்டுர் தைத்யாநுஜாபார்யாரா சநாநாமகந்யகா
> ஸந்நிவேஸஸ்ததாஜக்ஞே விஸ்வரூபஸ்ச வீர்யவாந்

(த்வஷ்டுர் தைத்யாநுஜா) என்னும் வசனத்தால் துவஷ்டாவுக்கு ரசனையென்கிற பாரியையினிடத்தில் பராக்கிரமசாலியான விஸ்வரூபர் உண்டானார். இந்தப்ரகாரம் சுருதிஸ்மிருதி புராணாதிகளில் விஸ்வகர்மாவின் புத்திரர் த்வஷ்டுப்ரஜாபதி யென்றும் த்வஷ்டுப்ரஜாபதியின் புத்திரர் விஸ்வரூபரென்றும், இவர்கள் தேவர்களில் சிரேஷ்டமானவர்களென்றும், இந்த விஸ்வரூபரே ஆசாரியாயிருந்து தேவர்களுக்கு யஜனமுதலான சமஸ்த கர்மங்களும் செய்து வைத்தாரென்றும் கூறப்பட்டிருக்கிறதினால், தத்வம்சஜர்களான எங்களுக்கு யாகத்தைச் செய்து வைப்பதற்குள்ள அதிகாரமானது பிரகாசித்துக் கொண்டிருக்கிறதென்றுஞ் சொல்லவே,

சபையோர்களுடைய ஆறாவது பிரஸ்நம் ஆரம்பிக்கப்படுகிறது.

கேள்வி:

இந்தப்பிரகாரம் சுருதிஸ்மிருதி புராணங்களினிடைய அபிப்பிராயத்திற்கு எதிர்கட்சியாகப் பேசுவது யாவர்களுக்கும் சாத்தியப்படமாட்டாது, அப்படியிருந்தாலும் இந்தக்கர்மத்தை எங்களால் உங்களுக்கு எப்படி நடத்திவைப்பது நாங்கள் [1]பிரம்மோதன பக்ஷணம் செய்பவர்களல்லாமற் போய்விட்டோமே யென்றும் சொன்னார்கள்.

உத்தரம்:

எங்களுடைய புத்திரன் [2]அத்வரியுவாக இருந்து யாககர்மத்தைச் செய்வான். மேலும் இந்த யாககர்மத்தைச் செய்து வைப்பதற்கு யோக்கியர்களான நான்கு [3]ரித்விக்குகள் எங்களுக்குள்ளாகவே இருக்கிறார்கள் என்று சொல்லவே,

---

1 பிரம்மோதன பக்ஷணம்- யாகவேதிகையில் அன்னம் செய்து யாகசம்பந்தமான ரித்விக்குள் புசிப்பது.
2 அத்வரியு- யாகம் நடத்த வேண்டிய விதிகளைச் சொல்லி நடத்துபவர்.
3 ரித்விக்குகள்- யாகத்திற்குச் சகாயமாக மந்திரம் சொல்லும் பிராம்மணர்கள்.

சபையோர்களின் ஏக்ஷாவது பிரஸ்நம் ஆரம்பிக்கப்படுகிறது,

<u>கேள்வி:</u>

சம்பத்துடையவராகவும், சமர்த்தராகவும், வித்வானாகவும், புத்திரனுடையவராகவும், வார்த்தீகத்தை யடையாதவராகவும் இருக்கிறவர் யாகம் பண்ணவேண்டும். இத்யாதி குணசம்பத்துக்கள் உங்களிடத்திலிருக்கிறதினால் எங்களிடைய அநுமதியினால் உங்களுக்கு என்னபிரயோஜனம் என்று கேட்கவே,

<u>உத்தரம்:</u>

எங்கள் க்ருஹங்களில் சம்பவிக்கும் ஸ்மார்த்தகர்மங்களாகிய விவாகாதி காரியங்களில் ஏககார்யமாகச் சம்பவிக்கும்போது நீங்களும் நாங்களும் கலந்து ஏகப்ரம்மாசனத்திலிருந்து பேதங்களில்லாமல் அந்தக் கார்யத்தை நடத்தவும், இரண்டு காரியங்களாகச் சம்பவிக்கிற காலத்தில் நாம்கலந்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரம்மாசமத்திலிருதுகொண்டு நீங்கலும் நாங்கலும் ஏகமாகவே ஒவ்வொருவரும் அந்த கர்மத்தை நிறைவேற்றி, அவர்களினால் கிடைக்கும் திரவியத்தை இரண்டு பாகஞ்செய்து, சரிபாகமாய் எடுத்துக்கொள்ளுகிறோம். இப்படிப்பட்ட தர்மம் உங்களுக்கும் எங்களுக்கும் இருக்கிறபோது உங்களுடைய அநுமதியை நாங்களடையாமல் இந்தக்கர்மத்தைச் செய்வதற்கு எங்களுக்கு அநுகூலலில்லை. ஆனதால் உங்களனுக்ஞையைப்பெற்று அவ்விதம் நடத்திக்கொள்ள எங்களுடைய அபேக்ஷையிருப்பதால் இந்த யாககாலத்தில் தங்களைப் போன்ற பெரியோர்களைப் பூஜித்து உங்களுடைய அநுமதியடைந்து உங்களிஷ்டம்போல நடந்து கொள்வதற்கு இச்சையுடையவர்களாயிருக்கிறோமென்று உபசார வார்த்தயாகச் சொல்லவே,

சபையோர்களுடைய எட்டாவது பிரஸ்நம் ஆரம்பிக்கப்படுகிறது.

ஆருஷேயர்கள் சொல்லுகிறார்கள். அதாவது உங்களுடைய வித்யாவிநய சம்பத்துகளுக்கு நாங்கள் சந்தோஷித்தோமென்று சொல்லவே, பௌருஷேயர்கள் சொல்லுகிறார்கள். அதாவது உங்களை இந்த யாககர்மத்திலே பிரம்மாதிவருணதர்மங்க ளுடையவர்களாக வரிக்கிறோம், இந்த சபையோர்களுடைய அனுமதி பெறவேண்டியதற்காகவே யஜுர்வெதம், ருக்வேதம், ஸ்ரௌதம், ஐந்தாம் வேதமாகிய பாரதம், தர்ம சாஸ்திரம், விஷ்ணுபுராணம், ஸ்காந்தபுராணம், பாகவதம், பிரம்மாண்ட புராணம், சிற்பசாஸ்திரம், இவை முதலானவைகளில் பிரதிபாதிக்கின்ற சுருதிஸ்மிருதி வசனங்களாலே பஷ்டமாக நிரூபித்தோம், ஆனதினால் எங்களிடத்தில் அநுக்ரக திருஷ்டி வைசுவதேவ முதலான கர்மத்தையும் சம்பூர்ணமாக நீங்கள்சமீபத்திலிருந்து நடத்திவைக்க வேண்டும். அந்தப்படி உங்களுடைய அனுமதியினால் நாங்கள் நடந்து கொள்ளுகிறதிலும், அதைவகிக்கிறதிலும், அடிக்கடி இச்சையுடையவர்களாயிருக்கிறோம் என்று சொல்லவே,

ஒன்பதாவது பிரஸ்ந ரூபமாகவே சபையோர்களின் அனுமதி,

யஜுர்வேதம் மூன்றாவது அஷ்டகத்திலும், நான்காவது அஷ்டகத்திலும், காணப்படுகிற ஸ்ருதிகளினால் நீங்கள் விஸ்வகர்ம சந்ததிகளென்றும் புருஷசூக்தம், பாரதம், பாகவத முதலான வசனங்களினால் விஸ்வகர்மாவின் புத்திரர் துவஷ்டு ப்ரஜாபதி யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நான்காமஷ்டகத்தில் (அபாந்துவா) என்னும் பிரஸ்நத்தினாலும், ஸ்காந்த புராணத்தினாலும், விஸ்வகர்ம சந்ததியார்களுக்கு நூற்றிருபத்தைந்து கோத்திரங்கள் சம்பவமானதாகத் தெரியவருகிறது. இந்த எஜமானனுடைய கோத்திரம், அபுவனருஷி கோத்திரம், இந்த கோத்திரமும் ஸ்ருதியில் பிரசித்தமாகவே சொல்லப்பட்டிருக்கிறது அதாவது,

<u>ஸ்ருதி:</u>

ப்ரதீசீதிஸாம் வர்ஷருதூநாம் விஸ்வே தேவா
தேவதா வித்ர்ரவிணம் ஸப்த தஸஸ்தோமஸ்ஸ உவேக
விம்ஸவர்தநி ஸ்த்ரிவத்ஸோவ யோத்வாபரோயாநாம்
பஸ்சாத்வாதோவாதோஹ <u>பூவநருஷி:</u>

(ப்ரதீசீதிஸாம்) என்னும் சுருதிப்ரகாரம் அபூவன ரென்று ஒரு ருஷியின் நாமம், இந்த ருஷியானவர் மஹாப்பிரபவ முடையரென்றும் இவரே துவஷ்டாவென்றும் இந்த துவஷ்டு சம்பந்தமானவர்களுக்கு சமஸ்த யாகமுதலான கர்மங்களில் பிரவர்த்தக முடையவரென்றும், பாஷ்யகர்த்தாவான வித்யாரண்யர் விவரித்திருக்கின்றார். இப்படிப்பட்ட தர்மங்களோடுகூடின இந்த விஸ்வகர்ம வம்சத்தவர்களுக்கு க்ஷத்திரிய, வைசிய தர்மங்களான கர்மாருகத்வமுண்டாகமாட்டாது. விஸ்வகர்ம சந்ததிகளான இவர்கள் பிராம்மணாந்தர்ப்பூத பௌருஷேயப் பிராம்மணார்களானதினால் காயத்ரி சந்தஸ்ஸும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், (ருரூணைந்த்வா) என்னும் வேதவாக்கியத்தினால் பூஜிக்கத்தக்கவர்களான யோக்கியர்களென்றும் கூறியிருக்கறது.

இந்தப்பிரகாரம் ஸ்ருதிஸ்மிருதி புராணங்கள் முதலான வசனங்களினால் ப்ராப்தமான ஆதானாதி கர்மங்கள் எப்பொழுது உண்டாயிற்றென்ற எல்லையில்லாமல் அநாதியாகப்

பிரவர்த்திக்கப்பட்டிருக்கிற ஆசாரப் பிரகாரத்தி லந்த ஆருஷேய பௌருஷேயப் பிராம்மணர்களினாலே இந்த யாக கர்மத்தைச் செய்கிறதில் யாதொருதோஷமுமில்லை யென்று சொன்னார்கள்.

இவ்விதமாகச் சொல்லிய சபையோர்களின் அநுமதிபெற்று சாலிவாகனசகாப்தம் 1797 வருஷம் யுவவருஷம் சைத்ரமீ சுக்லபக்ஷத்து சதுர்த்தியும், சுக்ரவாரமும் ரோகினணி நக்ஷத்திரம் பிரதமபாதமும் கூடின சுபதினத்தில் இந்த ஆதானகர்மத்தைச் சங்கற்பித்து பிரம்மோதன பக்ஷணம் [1]அக்னிமதனம், மறுநாள், [2]பவமானேஷ்டி, [3]பிரதிபதேஷ்டி, சரத்ருதுவில் செய்ய வேண்டிய [4]ஆக்ரயனேஷ்டி, [5]சம்வத்ஸரவிரதம், முந்நூற்றறுபது அக்னிஹோத்ரங்களும், [6]வியாஹ்ருத்யா சாதனமும் செய்து, கிரமமாக இந்த யாக கர்மத்தை நிறைவேற்றி யதாசாஸ்திரீயமாக அக்கினிஹோத்திராதிகளை [7]அவிச்சின்னமாக நடத்திக்கொண்டிருக்கிறோம்.

நாங்கள் சித்தாத்திரி நாமசம்வத்ஸரம் மாகமீ சுக்லபக்ஷம் தசமிதிதியில் வைசுவ தேவகர்மத்தைச்செய்து அதுமுதல் ஆதான கர்மத்தைச் செய்யவேண்டுமென்று இச்சையுண்டாகி இதிலெழுதிய கிராமங்களுக்குச் சஞ்சாராமாக புரப்பட்டு சமஸ்த வித்வசிரோமணிகளிடத்தில் சம்பாஷணை செய்ததில் அந்த வித்வாம்ஸர்களானவர்கள் எங்களைப் பார்த்துச் சொன்னதாவது,

<u>ஸ்ருதி:</u>

ப்ராசீதிஸாம் வஸந்தருதூநா மக்நிர்தேவதேதி,
தக்ஷிணாதிஸாம் க்ரீஷ்மருதூநாமிந்த்ரோ தேவதேதி,
ப்ரதீசீதிஸாம் வர்ஷாருதூநாம் விஸ்வேதேவா தேவதேதி,
உதீசீதிஸாம் சரத்ருதூநாம் மித்ராவருணௌ தேவதேதி,
ஊர்த்வதிஸாம் ஹேமந்த சிசிராவ்ருதூநாம் ப்ருஹஸ்பதிர் தேவதேதி.

இந்த (ப்ராசீதிஸாம்) என்னும் ஸ்ருதிவசனங்களால் உங்களுடைய கோத்திர ரிஷிகளின் தேவதைகளைச் சொல்லுமிடத்து கிழக்குத்திக்கும் வசந்தருதுவுக்கும் அக்னியும், தக்ஷிணதிக்கும் கிரீஷ்மருதுவுக்கும் இந்திரனும், மேற்குதிக்கும் வருஷருதுவுக்கும் விஸ்வதேவர்களும், வடக்குதிக்கும் சரத்ருதுவுக்கும் மித்ராவருணர்களும்,

<u>சூத்திரம்:</u>

வஸிஷ்ட வாஸிஷ்டேந்த்ராக் நிப்ரமதா பரத்வாஜபராஸரகஸ்யபரி,
மந்யு மித்ராவருண கௌண்டிந்ய ஸம்க்ருதிபூதிமாதகௌரீதி.

வஸிஷ்டவாசிஸிஷ்ட இந்த்ர அக்னிபிரமதா பரத்வாஜ பராசர கஸ்யப மன்யு மித்ராவருண கௌண்டின்ய சங்க்ருதி பூதி மாஷ கௌரீமுதலானரிஷிகளின் தேவதைகள் ஒன்றுக்கொன்று சோர்ந்திருக்கிறதினால் யாஜமான விஷயத்தில் சம்சயமிருக்கிறதென்றும் சொன்ன வித்வான்களுக்கு ஸ்ருதிஸ்மிருதிப்ரகாரம் சமஸ்த சங்கைகளுக்கும் உத்தரம் கொடுத்துப் பிறகு,

<u>ஸ்ருதி:</u>

ரூபூணாம்த்வேதி.

(ரூபூணாம் தேவானாம் வ்ருதபதே) என்னும் யாஜமான மந்திரமும் பிராம்மணபரமாய் பிரதிபாதிக்கிறதினால் இந்த யாஜமான மந்திரமும்,

<u>ஸ்ருதி:</u>

காயத்ரீ பிர்ப்ராம்ஹணஸ்யேதி.

(காயத்ரீ பிர்ப்ராம்ஹணஸ்யேதி.) என்னும் காயத்ரீ சந்தஸ்ஸு பிராமமணனுக்குக்கென்று சொல்லப்பட்டிருக்கிறதினால் இந்தகாயத்ரிசந்தஸ்ஸும்,

---

1 அக்னிமதனம்- யாகத்திற்காக மரத்தை தேய்த்து அதனிடமிருந்து அக்கினியைக் கொள்ளுதல்
2 பவமானேஷ்டி- யாகத்திற்கு முந்நாளில் செய்யும் ஓமம்.
3 பிரதிபதேஷ்டி- பாட்டியத்திற் செய்யும் ஹோமம்.
4 ஆக்ரயனேஷ்டி- முதல் செய்ய வேண்டிய ஹோமம்.
5 சம்வத்ஸரவிரதம்- வருஷத்திற்கொருதரம் செய்யும் ஹோமம்.
6 வியாஹ்ருத்யாசாதனம்- மந்திரத்தைச் சாதித்தல்
7 அவிச்சின்னமாக- பங்கமில்லாமல் நடத்துவது

ஸ்ருதி:

வர்ஷாஸூர ரதகாராஅததீதேதி.

(வர்ஷாஸூர ரதகாராஅததீதேதி.) என்னும் ஆதானகாலவாக்யமும், பிரமவம்சத்தவர்களான எங்களுக்குச் சித்தாந்தமானதைப் பிருந்தாவனபட்டணத்தில் சேர்த்திருக்கிற சபையார்களான வித்வாம்ஸர்களாலும், இன்னமும் சிலகிராமங்களிலிருக்கிற பிரமவித்துக்களான பெரியோர்களாலும், அங்கீகாரம் பண்ணப்பட்டிருக்கிறது.

அங்கீகாரஞ் செய்த முக்கியஸ்தர்களான வித்வ ரத்நங்களின் நாமதேயங்கள்.

பிருந்தாவன பட்டணவாசிகள் சிந்தகுண்டபால்ய அக்கிரகாரத்தில் வசிக்கும், சர்வு-ராமச்சந்திர சோமயாஜிகள், கேதவபுர சோமயாஜிகள், காஜா-சோமயாஜிகள், கல்லேபல்லே அக்கிரகாரத்தில் வசிக்கும் மத்தூரி-சந்திரசேகர சயனயாஜிகள், அவிசகட்ட கிராமத்திலுருக்கும் தங்கிரால் வேங்கடஜலஸ்ரௌதிகள், சாடபர்த்தி அக்கிரஹரத்திருக்கும் குண்டு-சுப்ரமண்ய சாக்னிசித்சோமயாஜிகள், சுசுர்வ-சிவராம சோமயாஜிகள், சந்தேருகிராமத்திலிருக்கும் செருகுபல்லேஜொகாவதானிகள், சோமவரகிராமத்திலிருக்கும் தூமலூரி-பிரம்மவதானிகள், மைலவரம் கிராமத்திலிருக்கும் ஜோந்நாபோட்ல- யச்ஞுந்நதீக்ஷிதர், சிரவேடகிராமத்திலிருக்கும் பமிடிமற்றி-வேங்கடாவதானிகள், பாஹுபலேந்த்ரகூடி கிராமத்திலிருக்கும் ஸூரி-சுப்ரமண்ய சோமயாஜிகள், நூஜேடி கிராகத்திலிருக்கும் திட்டகவி-ஜோகிதீக்ஷிதர், ஆகிரிபல்லே கிராமத்திலிருக்கும் பொம்மகண்டி-ஜீகிசோமயாஜிகள்.

ம-ஸ-ஸ-ஸ்ரீ கோரங்கி சப்மேஜஸ்திரேட்டு சுவர்ண சுப்ரமண்யரென்ற நாமதேயமுடையவராலே சேர்க்கப்பட்ட சபையோர்களான:
கோதவரிதீர மதங்கேரு கிராமத்திலிருக்கும் உப்புலூரி-பீமந்நசாஸ்திரிகள், கொத்தபாட்டிய அக்கிரஹாரத்திலிருக்கும் சீமலகொண்ட பிரம்மய்ய சாஸ்திரிகள், மல்லேசுவர கிராமத்திலிருக்கும் மண்டவல்லி-வராஹ சாஸ்திரிகள், மண்டபாக்கிராமத்திலிருக்கும் தேவரகொண்ட வீரேசுவர சாஸ்திரிகள், காகரபர்த்தி கிராமத்திலிருக்கும் சாமவேதி-பாப்பய்யாவதானிகள், முக்காமலகிராமத்திலிருக்கும் பீஸபாடி-வெங்கப்ப சோமயாஜிக்கள், தோனேபூடி-பிரம்மாவதானிகள், ஆகொண்டி-அத்வைத பரப்ரம்ம சாஸ்திரிகள், தாடிபற்று கிராமத்திலிருக்கும் வாஜபேயயாதுல அப்பாவதனிகள்.

இப்படிப்பட்ட சகலமான பெரியோர்களினாலும் அங்கீகாரஞ் செய்யப்பட்டிருக்கிறது. ஆதலால், இந்த ஆதானகர்மங்களைச் செய்து இவை முதலானவைதீககர்மங்களில் பிரவர்த்தகர்களாய் அக்னிஹோத்ராதி தர்மங்களை நடத்திக்கொண்டே வந்திருக்கிறோம்.

யஜுர்வேதம் ஸ்வாத்தியாய பிராம்மணம்,

ஸ்ருதி:

ப்ராம்ஹணோ வைஸர்வாதேவதா: ஸர்வாபிரே வைகம்
தேவதா பிருத்தரதி யாவதீர்வை தேவதாஸ்தா ஸ்ஸர்வாவேத
விதிப்ராம்மணே வஸந்திதஸ்மாத் ப்ராம்மணேப்யோ
வேதவித்ப்யோதி வேதிவேநமஸ்குர்யாந்நாஸ்லீலம்
கீர்தயே தேதாயேவதேவதா: ப்ரீணாதி.

(ப்ராம்ஹணோ வைஸர்வாதேவதா) என்னும் ஸ்ருதியினால் பிராம்மணர்கள் சர்வதேவதா சொரூபிகளென்றும் சமஸ்தமான தேவதைகளினாலும் பிராம்மணன் கரையேறுகிறானென்றும் சகலமான தேவர்களும் வேதவித்தான பிராம்மணனிடத்தில் வசிக்கிறதினால் அவர்களைப் பிரதிதினமும் நமஸ்காரஞ் செய்யவேண்டுமென்றும் அவர்களின் குணசீலத்தைச் சொல்லமுடியாதென்றும் இவர்களிடத்தில் சமஸ்த தேவர்களும் சந்தோஷத்தையடைகிறார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்மிருதி ஸ்லோகம்:

நித்யாந்நதாதா தருணாக்நிஹோத்ரீ ஸதோபவாஸி சபதிவ்ரதாச,
வேதாந்தகாமாஸஸஹஸ்ர ஜீஸஷ்ட்விஸ்வலோகே மமவந்த நீயா:

(நித்யாந்நதாதா) என்னும் வசனப்ரகாரம் இந்த ஜகத்திலிருக்கிற ஜனங்களில் பிரதிதினமும் அன்னம் கொடுக்கிறவரும் அக்னிஹோத்திரம் செய்கிறவரும், எப்பொழுதும் உபவாசமிருக்கிறவரும் வேதாந்த சாஸ்திரம் தெரிந்தவரும் ஆயிரமாசம் ஜீவித்தவரும் பதிவிருதையும் இந்த ஆறுபேர்களும் எனக்கு நமஸ்காரஞ் செய்யயோக்யர்களாக இருக்கிறார்கள்.

ஸ்ருதி:

ஆஸஹஸ்ராத் பங்திம் புநந்தீதி:

(ஆஸஹஸராத் பங்திம் புநந்தீதி:) என்னும் ஸ்ருதியால் அவிச்சின்னாக்னி ஹோத்திரியான ஒரு பிராம்மணன் பந்திமத்தியில் போஜனம் செய்தால் ஆயிரம் பிராம்மணர்கள் பரிசுத்தியடைகிறார்கள்.

ஸ்ருதி:

தஸ்மாத் யஜமானோ யஜமாநாதுத்ர:
அயஜமாநாத நாஹிதாக் நேர்யஜமாந ஆஹி தாக்நி:

(தஸ்மாத் யஜமானொ) என்னும் வாக்கியத்தால் பிராம்மண ஜாதியில் ஜனனமானவர்களனைவருக்கும் சிரேஷ்டமாயும் நமஸ்காரயோக்கியமாயுமிருக்கிற ஆஹிதாக்கினி தர்மங்கள் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனதால் வேதவித்துக்களாகிய பிராம்மணர்களுக்காக நமஸ்காரத்தை விதிக்கப்பட்டிருக்கிறது.

உபநயனகர்மத்தினால் துவிஜத்வம் அடைந்தவர்களுக்கு,

சூத்திரம்:

ஆ ததோகிரூந்மாத்ரூ நந்யாம் ஸ்சவ்ருத்தாந்
நமஸ்க்ருத் வாபிக்ஷாம் யாசயேதிதிகுரவ உபதிஸந்தி:

(ஆ ததோகுரூந்) என்னும் சூத்திரப்பிரகாரம் குருவையும், மாதாவையும், அன்னியர்களையும், வயதானவர்களையும், நமஸ்காரஞ்செய்து பிக்ஷையைக் கேட்கவேண்டுமென்று குரு உபதேசிக்கின்றாரேயல்லாமல் அவருக்காக நமஸ்காரஞ்சொன்னதல்ல.

கிரகஸ்தாச்சிரம தர்மத்தில்,

சூத்திரம்:

ஏனையா யாவஜ்ஜீவம் ஹோஷ்யாமி
ஔபாசநமாரப்யே இதி உபயோஸ்ஸங்கல்ப:

(ஏனையா யாவஜ்ஜீவம் ஹோஷ்யாமி) என்னும் வசனத்தால் ஆக்னேயஸ்தாலிபாகானந்தரம் ஔபாசனாம் பசமையம் இந்த ஸ்திரீயோடுகூட ஜீவபரியந்தம் ஹோமம் செய்கிறேனென்று இரண்டுபேர்களையும் சேர்த்துச் சங்கற்பஞ் செய்துகொண்டு அந்த ஔபாசனத்தைச் செய்யாதவர்களுக்கு,

ஸ்லோகம்:

ஔபாசன விஹினஸ்துஸ்த்ரியம் வாயோபிகச்சதி
ஸமாத்ருக மநம்ப்ராப்தா இதிவைவஸ்வதோப்ரவீத்.

(ஔபாசனவிஹினஸ்து) என்னும் நியாயத்தினால் ஔபாசனம் பண்ணாமல் தன்னுடைய சொந்தஸ்திரீயினிடத்தில் சம்போகம் செய்தன்மாதுருகமனம் செய்ததோஷத்தை யடைகிறானென்று வைவஸ்வத மநுவினால் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும்,

ஸ்ருதி:

அத்யாஸ நாத தீபாநாதிதி:

(அத்யாஸ நாத தீபாநாதிதி) என்னும் ஸ்ருதியினால் ப்ரம்மயக்ஞம் வைசுவதேவ முதலான பஞ்சயக்ஞங்களைச் செய்யாமல் அன்னபானாதிகளை யருந்தினால் சுராபானத்துக்குச் சமமான தோஷமுண்டாகுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும்,

ஸ்லோகம்:

கண்டிநீ பேஷிணீ சுல்லிமார்ஜ்ஜநீ சைவகும்பிநீ
பஞ்சஸூநா க்ருஹஸ்தஸ்ய நதைஸ்வர்கோபி தீயதே.

(கண்டிநீ) என்னும் வசனத்தால் கிரகஸ்தர்கள் போஜனம் செய்யவேண்டுமானால் பஞ்சசூனாவென்ற கண்டிநீ-நறுக்குதலினாலும், பேஷீணீ அரைத்தல் குத்தல் திரித்தல் பிசைதலினாலும், சுல்லினீ-விறகை அடுப்பிடுகிறதினாலும், பதார்த்தங்கள் எங்கேயுண்டாகிறதோ அதிலிருந்து பேதப்படுத்துகிறதினாலும், மார்ஜ்ஜனீ-பெருக்கல் துடைத்தல் தேய்த்தவினாலும், கும்பினீ-ஜலம்புரோக்ஷிக்கிறதினாலும், இந்த ஐந்துவித இம்சையன்றி ஆகாரஞ்செய்ய இடமில்லாமலிருக்கிறது. அந்த ஐந்துவித இம்சைக்காகவே வைசுவதேவகர்மம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனதினால் வைசுவதேவகர்மத்தைச் செய்யாதவர்களுக்கு இந்தப் பஞ்சசூநாதோஷம் நிவர்த்தியாகாதாதலால் சுவர்க்கம்கிடைத்த லரிதென்றும் கூறியிருக்கிறது. அந்தக்காரணத்தினால்,

ஸ்லோகம்:

அக்நிர் தேவோத் விஜாதீநாம்

(அக்நிர் தேவோத் விஜாதீநாம்) என்னும் வாக்கியத்தினால் துவிஜாதிகளான பிராம்மணக்ஷத்திரிய வைசியர்களுக்கு அக்நிபகவானே பிரதான தெய்வமாக காணப்படுகிறது. ஆதலால், இந்தவைசுவதேவகர்மத்தைச் செய்தவர்களுக்கு,

ஸ்மிருதி:

யேபடந்தி த்விஜாவேதம் பஞ்சயஜ்ஞ வ்ரதாஸ்சயே
த்ரைலோக்யம் தாராயத்யேஷாம் பஞ்சேந்த்ரியரதா அபி

(யேபடந்தி) என்னும் பராஸரவாக்கியத்தினால் எந்த துவிஜர்களானாலும், வேதத்தை உச்சரிக்கவோ பிரமயக்ஞம், பிதுருயக்ஞம், பூதயக்ஞம், மநுஷ்யயக்ஞம், முதலான பஞ்சயக்ஞ சொரூபமாயிருக்கிற வைசுவதேவகர்மத்தச் செய்கிறதானால் அவர்களுக்கு மூன்று லோகங்களையும் அடையும்படியான தர்மமும் அவர்கள் வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் முதலிய கர்மேந்திரியங்களில் பந்தப்பட்டவர்களா யிருந்தபோதிலும் முன்சொன்ன பதவிகள்முதலாகிய சகல பலமும் கிடைக்குக்படியான பாத்திரவானாகின்றார்கள். ஆதலால், எப்படிப்பட்டவரா யிருந்தாலும் வைசுவதேவம் செய்யாதவர்கள் ஆஹிதாக்னிகளல்லார். மேலும்,

ஸ்மிருதி:

அநூஹிதாக்ந யோக்ஞாநாக்கேவலம் வேதபாரகா:
பிஸூநா: க்ரூரகர்மாண: பரிஷத்வம் நவித்யதே.

(அநூஹிதாக்நயோ) என்னும் பராஸர வசனத்தினால் யாகஞ் செய்யாதவர்களாயும் அக்ஞானத்தினால் கேவலம் வேதாத்தியயனம் செய்யாதவர்களாயும் கோட்சொல்லுகிறவர்களாயும் குரூரமான கர்மத்தைச் செய்கிறவர்களாயும் இருக்கிறவர்களுக்குப் பரிஷத்வமில்லை. அதாவது, சபையிலிருக்க யோக்கியர்களல்லரென்றும் சொல்லப்பட்டுகின்றன. அன்றியும்,

ஸ்மிருதி:

அவ்ருதாநாம் மந்த்ராணாம் ஜாதிமாத்திரேப ஜீவிநாம்
ஸஹஸ்ரஸஸ் ஸமேதாநாம் பரிஷத்வம் நவித்யதே.

(அவ்ருதாநாம்) என்னும் பராஸரவர்க்யத்தால் வேதவிரத விஹீனர்களாகவும், வேதாத்தியனஞ்செய்யாமலும், ஜாதியைமாத்திரம் சொல்லிஜீவிக்கின்றவர்கள் ஆயிரம் பேர்கள் கூடுனாலும் அவர்களுக்குப் பரிஷத்வமில்லை யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனதினால் கிருகஸ்தர்களுக்கு ஆதானாதிகர்மங்களும், வைசுவதேவ முதலான கர்மங்களும் அவசியம் செய்யவேண்டியதென்றும் சூசிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப்பிரகாரம் கிருகஸ்தாச்சிரம் தர்மத்திலிருக்கிறவர்களுக்கு இதிலெழுதியிருக்கிற ஸ்ருதிஸ்மிருதி அர்த்தங்களுக்குச் சம்சயம் நியாய விதியை எடுத்துச் சொல்லலாம்.

எங்களுக்குச் செய்யவேண்டியதாயிருக்கிற குலதர்மமிதுவென்று சுருதிகளே முறையிட்டிருக்கின்றது என்றுசொல்ல,

சபையோர்களின் உத்தரம்:

உங்களுக்குயாகச்சுதந்திரமும் இருப்பதால் நீங்கள் இந்தகர்மங்களை செய்துகொள்ள யாதொரு தடையில்லை யென்று தீர்மானித்தார்கள்.

<u>ஸ்ருதி:</u>

நகர்மணா நப்ரஜயாத நேஸநகேவும் ருதத்வமாநஸு:

<u>ஸ்லோகம்:</u>

**பரேண நாகம் நிவஹிதம் குஹாயாம் விப்ராஜதே யத்யதயோவிஸந்தி வேதாந்த் விஜ்ஞாநஸு நிஸ்சிதார் தாஸ்ஸந்யாஸந்யாஸ யோகாத்ய தயஸ்ஸுத்த ஸத்வா.**

(நகர்மணா) என்னும் முதலானவசன நியாயங்களினால் சத்கருமத்தைச் செய்யாமலும், புத்திரோத்பத்தியில்லாமலும், தனமில்லாமலும், தானங்கொடுக்காமலும் இருக்கிற கிருகஸ்தர்கள் மோக்ஷத்தையடைய மாட்டார்களோ வென்றால் இதராளான சந்நியாசிகள் சிரேஷ்டமான மார்க்கத்தினாலே மோக்ஷத்தையடைகிறார்கள். விசேஷித்தும் வேதசாஸ்திரங்களின் அர்த்தங்களை நிச்சயமாயரிந்து இருதயத்தில் பிரமத்தியானம் வைக்கப்பட்டு அதனால் பிரம்மமானது பிரகாசித்துக்கொண்டும் சத்வகுணத்தோடு மிருக்கிறசந்நியாசிகள் எவர்களுண்டோ அவர்களே பரப்ரம்ம சொரூபர்களாகவும் இருக்கிறார்கள்.

ஆதலால் அப்படிப்பட்ட குருசொரூபர்களுக்காக தீர்க்கதெண்ட நமஸ்காரமேயல்லாமல் இதராளுக்கு உண்டாகமாட்டாது என்னும் தாத்பர்யத்தைத் தெரிந்துகொள்ளவேண்டியதா யிருக்கிறது. ஆனதினால் நாங்கள் இதிற் கூறியிருக்கும் அர்த்தங்களனைத்தும் சரிதானோயென்று இன்னமும்வித்வாம்சர்களானவர்கள் பார்க்கட்டும்.

ஸமாப்தம்

***************